[1979 ஏப்ரல் 24

வட ஆற்காடு மாவட்டத்தில் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்.

* வினா எண். 792—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் அரசு உயர்நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

(இ) அதுபற்றி எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ) மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்யும் பொழுது வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து பணிமூப்பின் அடிப்படையில் பிற மாவட்டங்களுக்கு சிலர் மாற்றம் செய்யப்பட்டனர். அதனால் ஏற்பட்ட காலி இடங்களுக்கு பிற மாவட்டத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்ட சில தலைமை ஆசிரியர்கள பணியேற்காததாலும், சிலர் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு அவர்கள் பணியில் சேராததாலும் சில பணியிடங்கள் காலியாக உள்ளன. தற்பொழுது அந்தந்தப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களில் பணிமூப்பின்படி மூத்தவர்கள் தலைமை ஆசிரியர்கள் பொறுப்பில் இருந்து பணியாற்றி வருகின்றனர்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இப்படித் தலைமை ஆசிரியர்களை நியமனம் செய்யும் போது அந்தப் பணிக்கு அவர்கள் வராமல் இருப்பதற்குக் காரணம் வெகு தூரத்திலுள்ளவர்களை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ளவர்களை கூட நியமனம் செய்கிறார்கள், வடாற்காடு மாவட்டம் அல்லது அதற்கு அருகாமையிலுள்ளவர்களை நியமனம் செய்தால் அவர்கள் அந்தப் பணிகளை ஏற்றுக் கொள்வார்கள். வெகு தூரத்திலுள்ளவர்களை நியமனம் செய்வதால் தலைமை ஆசிரியர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்கள் கூட வராமல் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் இந்த நிலைமை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டம் அல்லது சுற்று வட்டாரத்திலிருந்து மட்டும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்போது தலைமை ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கிற பள்ளிகளில் உடனடியாக அவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களை நியமிக்கும்போது மாநிலம் முழுவதி லிருந்தும் பணி மூப்பின் அடிப்படையில் நியமிக்க வேண்டியிருப்ப தால் இந்தப் பிரச்சனை ஏற்படுகிறது. பணி மூப்பின் அடிப் படையில்தான் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டியிருக் கிறது. தற்போது அரசு கல்விதுறை அதிகாரிகளுக்குச் சொல்லி யிருக்கிற யோசனை, கூடியவரையில் பக்கத்து மாவட்டங்களில் நியமிக்க வேண்டும்; அதிலும் குறிப்பாக தூரமாக இருந்தால் அப்படிப்பட்ட இடங்களில் ஜூனியர்களைப் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது அந்தப் பதவீ உயர்வு தர முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம் ஏ.' விங்க், பி. விங்க்' இரண்டையும் இணைத்திருக்கிற உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் தடை உத்தரவு வாங்கியிருக்கிறார் கள். ஆகையால் பதவி உயர்வுக்குத் தடை இருக்கிறது என்றா லும் பணி மூப்பின் அடிப்படையில் தலைமை ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நெமிலி கிராம உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்.

*வினா எண் 793— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், நெமிலி கிராமத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளியில் 1975–76-ல் தலைமை ஆசிரியர் சம்பள பட்டுவாடாவில் அரசை மோசடி செய்து பணம் பெற்று கையாடல் செய்து எடுத்துச் செல்லப் பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை மோசடி செய்யப் பட்டது ?

(இ) அந்த ஆசிரியர் தற்போது பணியில் இருக்கிறாரா அல்லது வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ளாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 1975 மே மாதம் முதல் சூலை 1977 முடிய ரூ. 19,172 கையாடல் செய்யப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(இ) தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.